Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
**C.C.No. 707/2005**

-

**Deposition of witness for: PW - 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | ராமேஷ்வரி | **Father/Husband Name** | : | மதிமால் |
| **Age** | | | **Calling** | : | |
| **Date** | **:** | **06.10.2025** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of October 2025.
எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**(**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது**)**

**1ம் எதிரி ஆஜர். 3 மற்றும் 4ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது காவல் ஆய்வாளராக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தேனி மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2005ம் தேதி 12.35 மணிக்கு நான் சார்பு ஆய்வாளராக மேலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது புகார்தாரர் திருமதி.லதா என்பவர் கொடுத்த புகார் மீது மேலூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மனு எண் 170/2005, பார்வையிட்டு அம்மனுமீது மேலூர் காவல் நிலைய குற்ற எண் 445/2005 பிரிவு 498(A), 323, 506(2) இதச மற்றும் வரதட்சனை தடுப்பு சட்டம் பிரிவு 4ன்கீழ் எதிரிகள் அருண்குமார், காந்தி, ஆனந்த், உதயநிதி, சேது ஆகியோர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). அன்றையதினமே மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புகார்தாரர் லதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடமான திருவாதவூர் சென்று சாட்சிகள் திரு,முருகன், திரு.கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் மற்றும்**

**மாதிரி வரைபடம் முறையே அசாஆ 5 மற்றும் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**

அன்றையதினமே சாட்சிகள் நல்லுசாமி, பிரபு, அழகு, சிங்காரவேலு, லெட்சுமணன், ராஜேஷ், திரு,செல்வராஜன், ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றையதினம் எதிரிகள் திரு.அருண்குமார், திருமதி,காந்தி, திரு,சேது ஆகியோர்களை 15.30 மணிக்கு திருவாவூர் எதிரி வீட்டில் வைத்து காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து திரேக பரிசோதனைக்கு பின் பாராவில் ஒப்படைத்து பின்னர் தக்க வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வாதியினுடைய மறு வாக்குமூலம் 25.05.2005ம் தேதி விசாரித்து பதிவு செய்தேன். பின்னர் வாதி கூறியபடி திருமணத்தின்போது அவருக்கு கொடுக்கப்பட்ட சீர்வரிசை பொருட்களை பஞ்சாயத்தார்கள் மூலம் வாதியிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், வாதிக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திரு,வெங்கடாச்சலம் என்பவரிடம் வாதிக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை பற்றி காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கின் விசாரணையை ஆய்வாளர் பார்வைக்கு சமர்பித்தேன்.

**1ம் எதிரி ஆஜர். 3 மற்றும் 4ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பொதுவாக குற்றத்தின் கொடுமை தன்மைகேற்ப புகார் கிடைக்கப்பெற்ற உடனே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு எதிரியை கைது செய்வது வழக்கம் என்றால் சரிதான். புகார்தாரரிடமிருந்து புகாரை பெற்றுக்கொண்டு புகார்தாரர் ஊரான திருவாதூரிலிருந்து பெண்கள் அல்லது புகார்தாரரின் பெண் உறவினர்களான தாய், சகோதரிகளை விசாரித்து குடும்ப சூழ்நிலையை பற்றி தெரிந்துகொண்டு அவர்களது வாக்குமூலத்தை பதிவு செய்தேனா என்றால் அவ்வாறு குறிப்பிடப்படும் பெண்களை விசாரிக்கவில்லை. புகார்தாரரான லதாவை பெண் மருத்துவரிடம் அழைத்து சென்று அவருக்கு கர்ப்பம் சம்மந்தமாக பிரச்சனைகள் குறித்து சிகிச்சை கொடுத்த மருத்துவரை விசாரித்தேனா என்றால் புகார் பெற்று பட்டியல் சாட்சி செல்வராஜ் வாதி லதாவிடம் மருத்துவ நமுனா கொடுத்து மேலூர் அரசு மருத்துவனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்.

2) நான் புகார்தாரரையும், 1ம் எதிரியான புகார்தாரரின் கணவரையும் சமூக நல அலுவலர், மனோதத்துவ மருத்துவர் ஆகியோர்களிடம் குடும்ப ஆலோசனை பெறுவதற்கு பரிந்துரை செய்தேனா என்றால் ஏற்கனவே அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இது தொடர்பாக புகார் அளிக்கப்பட்டு சமரசம் செய்து அனுப்பபட்டுள்ளது. இதுசம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகார்தாரர் தனது வாக்குமூலத்தில் இது குறித்து கூறியுள்ளார். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்பட்ட அத்தாட்சி மூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது விசாரணையில் புகார்தாரரும், புகார்தாரரின் தந்தையான நல்லுச்சாமியும் எதிரியின் தாயாரான 2ம் எதிரி காந்தியும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். 5ம் எதிரி சேது புகார்தாரரின் அத்தையின் கணவர் என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்று தெரிந்துகொண்டேன்.

3) புகார்தாரர் கொடுத்த புகாரில் 2ம் பக்கத்தில் மூன்றாம் வரியில் " கழுத்தில் ஓங்கி மிதித்தார் " என்று இடை செருகளாக இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 5ம் வரியில் மண்ணெய் என்ற வார்த்தை அடிக்கப்பட்டு பெட்ரோல் என்று மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகார்தாரரிடமிருந்து எழுதப்படதா வெள்ளைதாளில் கையொப்பம் பெற்று பின்னர் காவல் நிலையத்தில் விவரங்களை பூர்த்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அதேபோல் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் மற்ற ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரருக்கும், 1ம் எதிரிக்கும் நீதிமன்றத்தின் மூலம் சம்பவம் நடந்த காலத்தில் திருமண முறிவு ஏற்பட்டதா என்றால் இல்லை. திருமண முறிவு ஆகாதவரிடமிருந்து அவரது சீர்வரிசை பொருளை புகார்தாரரின் தந்தையான அசா1ற்கு ஆதரவாக எதிரியிடமிருந்து பொருட்களை பறித்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, இருதரப்பினர்களும் மனம் ஒத்து, ஊர் பெரியவர்கள் முன்னிலையில் அவர்களாகவே பேசி முடித்து சீர்வரிசை பொருட்கள் புகார்தாரரிடம் கொடுக்கப்பட்டது. சீர்வரிசை பொருட்களை கொடுத்ததற்கு பின்னர் புகார்தாரர் 1ம் எதிரியுடன் வாழ்ந்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அதன்பின்னர் வாதி இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். எதிரிகள் புகார்தாரரிடம் வரதட்சனை கேட்கவோ, அவருக்கு காயம் ஏற்படுத்தவோ இல்லை என்றால் சரியல்ல.

4) அசா1 நல்லுச்சாமி நீதிமன்றத்தில் அதிக வழக்கு தாக்கல் செய்பவர் என்றால் தெரியாது, அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்பவர் என்றால் தெரியாது. அவர் தனது மகளை 1ம் எதிரியிடம் கட்டாயப்படுத்தி வாழ வைப்பதற்காக இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.